

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மசால்ஜி பணியிடத்திற்கு, தேர்வு செய்யபட்ட ஆறு நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (22.08.2016) பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 555/2016 நாள்: 22.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஐந்து இரவு காவலர்கள் மற்றும் ஆறு மசால்ஜி பணியிடத்திற்கு தேர்வு செய்யபட்டவர்களுக்கு இன்று (22.08.2016) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலகில் காலியாகவுள்ள ஐந்து இரவு காவலர் பணியிடத்திற்கும், ஆறு மசால்ஜி பணியிடத்திற்கும் (20.08.2016) அன்று எழுத, படிக்க மற்றும் நேர்முக தேர்வுகள் நடைபெற்றது.

இரவு காவலர் பணியிடத்திற்கு 852 விண்ணப்பங்களில் 526 நபர்களும், மசால்ஜி பணியிடத்திற்கு 946 விண்ணப்பங்களில் 556 நபர்களும் போட்டியில் கலந்து கொண்டனர். தகுதி, முன்னுரிமை மற்றும் இனசுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது. இத்தேர்வுகளை கண்காணிக்கவும், சான்றிதழ்களை சரிபார்க்கவும் மற்றும் இதர பணிகளுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பல்வேறு நிலையிலுள்ள 110 வருவாய்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டது.

இதில் இரவு காவலர் பணியிடத்திற்கு கிருஷ்ணன்கோவில், அறுகுவிளை என்ற முகவரியை சார்ந்த திரு. ரா. சுபாஷ் சந்திரபோஸ், வள்ளுவர் தெரு, பெருவிளை அஞ்சல் என்ற முகவரியை சார்ந்த திருமதி. எம். கமலா, பள்ளம்துறை என்ற முகவரியை சார்ந்த திரு. ம.ஆல்வின் மில்டன், கோயில்விளை, அகஸ்தீஸ்வரம் அஞ்சல் என்ற முகவரியை சார்ந்த திரு. தங்கமுத்து சேகர், கோதை கிராமம், ஒழுகினசேரி என்ற முகவரியை சார்ந்த திருமதி. ஜே.மேபல் ஆகிய ஐந்து நபர்களுக்கும், மசால்ஜி பணியிடத்திற்கு தலக்குளம், தும்பவிளை என்ற முகவரியை சார்ந்த திருமதி. ற்றி. காயத்ரி, கிருஷ்ணன்கோவில் என்ற முகவரியை சார்ந்த திருமதி. ஜே. வானதி, மணலிக்கரை என்ற முகவரியை சர்ந்த திருமதி. ம.மேரி ஷெர்லி, முடக்குளம், பத்மனாபபுரம், தக்கலை அஞ்சல் என்ற முகவரியை சார்ந்த திருமதி. எம்.மீனா, ஆலங்கோடு அஞ்சல் என்ற முகவரியை சார்ந்த திருமதி. எஸ். கிரிஜா, புல்லுவிளை, எறும்புகாடு அஞ்சல் என்ற முகவரியை சார்ந்த திருமதி. வெ. மகேஸ்வரி ஆகிய ஆறு நபர்களுக்கும் என மொத்தம் 11 நபர்களுக்கு பணி நியமான ஆணைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (22.08.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு. பொ. இராஜேந்திரன், ஒசூர் மேலாளர் திரு. சஜீத் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.